# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 2114/13 - 2019 මාර්තු මස 12 වැනි අඟහරුවාදා - 2019.03.12

*2114/13 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 12 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு, கம்பஹா, அத்தனகல்ல மற்றும் மினுவங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் நீர்த்தாங்கி, பண்டகசாலை மற்றும் நீர் இறைக்கும் இயந்திரசாலை ஆகியவற்றை நிர்மாணிப்பதற்காக காணித்துண்டு ஒன்றினை சுவீகரித்துக் கொள்வதற்கான தேவை ஏற்பட்டுள்ளமையால், இங்கு கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இல. 35, 'லக்திய மெதுர', புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்லை,
2019, மாச்சு 05.
5/2/3/1445.


1A – G29624 –50 (2019/03)

*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின், மினுவன்கொடை பிரதேச செயலாளர் பிரிவில், மேற்கு மினுவன்கொடை கிராம அலுவலர் பிரிவில் பொரகொடவத்த கிராமத்தில் அமைந்துள்ள 'ஜம்புகொடெல்லவத்த' என்றழைக்கப்படுகின்ற காணியின் முழு விஸ்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 52 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : உரிமையாளரை கண்டறியமுடியாதுள்ள தரிசு நிலம் ;
கிழக்கு : உரிமையாளரை கண்டறியமுடியாதுள்ள காணி ;
தெற்கு : டெலிகொம் பரிமாற்றக் கோபுரம் மற்றும் பன்சலைக்குச் சொந்தமான காணி ;
மேற்கு : பன்சலைக்குச் சொந்தமான காணி மற்றும் நிஹால் என்பவரின் காணி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : மினுவன்கொடை நகர சபை, மினுவன்கொடை.

03 -1284

---

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

92 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், கம்பஹா கழிவுநீர் அகற்றும் செயற்திட்டத்தின் கீழ் 15 ஆம் இலக்க கழிவுநீர் இறைக்கும் இயந்திரசாலையை நிர்மாணிப்பதற்காக காணிப்பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்ள வேண்டியுள்ளமையினால் இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.

ரவூப் ஹக்கீம்,
நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.

நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,
இல. 35, லக்திய மெதுர', புதிய பாராளுமன்ற வீதி,
பெலவத்த, பத்தரமுல்லை.
2019, மாச்சு 05.
5/2/3/1446.

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தின் கம்பஹா பிரதேச செயலாளர் பிரிவில், இல. 232, ஹெனரத்கொட கிராம அலுவலர் பிரிவில் மிரிஸ்வத்த கிராமத்தில் அமைந்துள்ள 02 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : கொழும்பு - கண்டி பெருந்தெரு மற்றும் குறித்த வயல் காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
கிழக்கு : வயல் காணியின் எஞ்சியுள்ள பகுதி ;
தெற்கு : வயல் காணியின் எஞ்சியுள்ள பகுதி மற்றும் 'சீன்' வியாபார நிலையம் ;
மேற்கு : 'சீன்' வியாபார நிலையம் மற்றும் கொழும்பு - கண்டி வீதி.

காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் : கண்டறிய முடியவில்லை.

03 -1285

**1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்**

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின் 92 ஆம் பிரிவின் கீழ் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி, நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகிய நான், குறித்த சபைக்கு கம்பஹா, அத்தனகல்லை மற்றும் மினுவங்கொடை, இணைந்த நீர் வழங்கல் செயற்திட்டத்தின் கீழ் இயந்திரசாலை, பண்டகசாலை மற்றும் அதற்குரிய கட்டிடம் ஆகியவற்றை நிர்மாணிப்பதற்கு காணிப் பகுதி ஒன்றினை சுவீகரித்துக் கொள்ள வேண்டியுள்ளமையினால், இங்கு கீழ் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக் கொள்வதற்கான கட்டளையை அனுமதிக்கின்றேன்.*

*ரவூப் ஹக்கீம்,*
*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சர்.*

*நகரத் திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு,*
*இல. 35, லக்திய மெதுர', புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்த, பத்தரமுல்லை,*
*2019, மார்ச்சு 05.*
*5/2/3/1447.*

**அட்டவணை**

*கம்பஹா மாவட்டத்தின் அத்தனகல்லை பிரதேச செயலாளர் பிரிவில், இல. 365-சீ, கரஸ்நாகல தெற்கு கிராம அலுவலர் பிரிவில் கரஸ்நாகல கிராமத்தில் அமைந்துள்ள "பலுதங்கொல்ல வத்த கெலே" என்றழைக்கப்படும் காணியின் முழு விண்தீரணத்தில் இருந்து அண்ணளவாக 1 ஏக்கர், 03 றூட், 34.95 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.*

வடக்கு : தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்குரிய உட்செல்லும் வீதி ;
கிழக்கு : மயான பூமிக்கு உட்செல்லும் பாதை ;
தெற்கு : மயான பூமிக்கு உட்செல்லும் பாதை மற்றும் துன் ஓகித வீதி ;
மேற்கு : கரஸ்நாகல துன் ஓகித வீதி.

*காணிக்கு உரிமை கோருபவரின் பெயரும் முகவரியும் :* திரு. வில்பட் அமரசிங்ஹ, கரஸ்நாகல, அலவல.

*03 -1286*